**செ. கு. எண்: 288** **நாள்: 20.12.2020**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் அறிக்கை – 20.12.2020

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், தோணுகால் கிராமத்தில் தேங்கியிருந்த மழைநீரில் நாலாட்டின்புதூரைச் சேர்ந்த திரு. மாரிக்கனி என்பவரின் மகன் சிறுவன் ஜெஸ்லின் என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், தேங்காப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வர்க்கீஸ் என்பவரின் மனைவி திருமதி பாத்திமா ராணி என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிள்ளியூர் வட்டம், பாலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. செபஸ்தியான் என்பவரின் மகன் திரு. ஏசுதாஸ் என்பவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிள்ளியூர் வட்டம், ஏழுதேசம் கிராமத்தைச் சேர்ந்த திரு.நசரேயன் என்பவரின் மகன் திரு. பிரடி(எ) பெறின் என்பவர் மீன் பிடி பணியின் போது, பலத்த கடல் அலையின் காரணமாக கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், மாதம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சத்தியகுமார் என்பவரின் மகன் செல்வன் மௌலி மற்றும் திரு. முருகன் என்பவரின் மகன் ஜீவானந்தம் மற்றும் திரு. ரங்கநாதன் என்பவரின் மகன் செல்வன் திலீப்குமார் ஆகிய மூன்று நபர்கள் குட்டையில் குளிக்கும் போது, நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் உள்வட்டம், முடுக்கன்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமன் என்பவரின் மகன் திரு. பழனி என்பவர் முடுக்கன்துறை பரிசல் துறை அருகே குளிக்க சென்ற போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சத்தியமங்கலம் வட்டம், புஞ்சைபுளியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகன் சிறுவன் அன்பரசன் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், விருதாசம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னாகவுண்டர் என்பவரின் மகன் திரு. பழனியப்பன் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வாழப்பாடி வட்டம், சிங்கிபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மனைவி திருமதி சாந்தி என்பவர் மரம் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், நல்லாண்பிள்ளைபெற்றாள் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாசிலாமணி என்பவரின் மகன் திரு. கதிரவன் என்பவர் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், கண்டம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் செல்வன் ரஞ்சித் மற்றும் திரு. மணிகண்டன் என்பவரின் மகன் செல்வன் முருகன் ஆகிய இருவரும் ஏரியில் குளிக்கும் போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், பழங்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. தமிழ்செல்வன் என்பவரின் மகன்கள் செல்வன் அகிலேஸ்வரன் மற்றும் செல்வன் பாலன் ஆகிய இருவரும் பாறைக்குழியில் குளிக்க சென்ற போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், கூனங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அய்யாவு என்பவரின் மகன் திரு. பாலன் என்பவர் மீன் பிடி பணியின் போது, வலையில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஆவடி வட்டம், வெள்ளானூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கமலக்கண்ணன் என்பவரின் மகன் திரு. மோகன்ராஜ் என்பவர் கழிவு நீர் தொட்டில் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், விராலிமலையைச் சேர்ந்த திரு. விவேகானந்தன் என்பவரின் மகன் திரு.காத்தவராயன் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

**சாலை விபத்து மற்றும் நீரில் மூழ்கி உயிரிழந்த 19 நபர்களின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்த 19 நபர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**